மனநலத்திறன் சட்டம்:

# அதிகாரம் பெறுநரின் ஒரு வழிகாட்டி

OFFICE OF THE PUBLIC GUARDIAN

## பொருளடக்கம்


**பகுதி A** **மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் நான் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?** **04**

A1. மனநலத்திறன் என்றால் என்ன? 04

A2. மனநலத்திறன் சட்டம் என்பது என்ன மற்றும் எங்களுக்கு இந்தச் சட்டம் ஏன் முக்கியமானது? 05

A3. நடைமுறை வழக்குத் தொகுப்பு 06

A4. நீண்டகால அதிகாரப் பத்திரம் 07

**பகுதி B** **பொதுக் காப்பாளர் அலுவலகம் என்ன செய்யும்?** **08**

B1. பொதுக் காப்பாளர் 08

B2. பொதுக் காப்பாளரின் பணிகள் 08

B3. பொதுக் காப்பாளர் அலுவலகம் 09

B4. வருகையாளர் வாரியத்தின் பங்குகள் 09

**பகுதி C** **அதிகாரம் பெறுநராக நான் தேர்வு செய்யப்படும்போது என்ன நிகழும்?** **10**

C1. இரு வகை அதிகாரம் பெறுநர் யாவை? 10

C2. தனியாள் நலன் அதிகாரம் பெறுநர் 10

C3. ஒரு தனியாள் நலன் அதிகாரம் பெறுநராக நான் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் யாவை? 12

C4. மற்ற கட்டுப்பாடுகள் 14

C5. விலக்கப்பட்ட முடிவுகள் யாவை? 15

C6. தனியாள் நலன் அதிகாரம் பெறுநராக எனது அதிகாரங்கள் எப்போது முடிவுபெறும்? 16

C7. சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர் 16

| | | |
|---|---|---|
| C8. | சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநராக நான் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் யாவை? | 17 |
| C9. | சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநராக எனது அதிகாரங்கள் எப்போது முடிவுபெறும்? | 19 |
| C10. | மற்ற கேள்விகள் | 20 |
| C11. | ஒரு அதிகாரம் பெறுநர் எப்படி முடிவுகளை மேற்கொள்ளவேண்டும் மற்றும் செயல்படவேண்டும்? | 20 |
| C12. | அதிகாரம் பெறுநராக நான் எப்படி பாதுகாக்கபடுவேன்? | 21 |
| **பகுதி D** | **அதிகாரம் பெறுநராக நான் என்ன முடிவுகளை மேற்கொள்ள முடியும்?** | **22** |
| D1. | என்ன முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் எப்போது முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்? | 22 |
| D2. | எந்த கட்டத்தில் தலையிட்டு முடிவெடுக்க வேண்டும் என்பது எனக்கு எப்படித் தெரியும்? | 22 |
| D3. | நான் ஐந்து சட்டப்பூர்வ நெறிகளை எவ்வாறு பயன்படுத்துவது? | 23 |
| **பகுதி E** | **கருத்து வேறுபாடு நேர்ந்தால் என்ன நிகழும்?** | **29** |
| E1. | கருத்து வேறுபாடு நேர்ந்தால் நான் என்ன செய்யவேண்டும்? | 29 |
| E2. | மேல் விவரங்களை நான் எங்கு தேடலாம்? | 32 |
| | **விளக்கச்சொற்கள்** | **34** |



அதிகாரம் பெறுநராக பங்கு வகிக்க நீங்கள் தேர்வு செய்யப்பட்டால்இந்தகையேடுஉங்களுக்குவழிகாட்டுகிறது. இது, அதிகாரம் பெறுநராக உங்களுடைய அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள், ஆகியவற்றைக்குறித்து உங்களுக்கு ஒரு மேற்பார்வை அளிக்கும்.

அதிகாரம் பெறுநராக நீங்கள், சுயமாக முடிவுகள் மேற்கொள்ளும் திறன் குறைந்தவர்களின் சார்பில் முடிவுகளை எடுக்கவும் செயல்படவும் பொறுப்பாவீர்கள்.

நிதி விவகாரங்கள், மருத்துவச் சிகிச்சை, அல்லது தனியாள் நல விவகாரங்கள் தொடர்பான கடினமான அல்லது சிக்கலான முடிவுகளை மேற்கொள்வதை நீங்கள் எதிர்நோக்கினால், சுயேச்சையான சட்ட மற்றும்/ அல்லது நிபுணத்துவ ஆலோசனையை நாடுமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

இந்த வழிகாட்டியில் உள்ள கற்பனைக் காட்சிகளும் உதாரணங்களும் விளக்கத்திற்காக மட்டுமே. இவை கற்பனைக் கதாபாத்திரங்களையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்துகின்றன. அவை ஏற்ற வழக்குகளுக்கான தொழில்முறை ஆலோசனைக்கு மாற்றானவை அல்ல. அதோடு, ஒத்த சூழ்நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவகளுக்கு எந்த வகையிலும் அவை பயன்படுத்தப்படக்கூடிய முன்னோடி முடிவாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. அவை எந்த ஒரு வழக்கிலும் ஒரு நீதிமன்றம் எவ்வாறு முடிவெடுக்கும் என்று சுட்டிக்காட்டுபவை அல்ல. இதில் உதாரணங்களில் விவரிக்கப்படாத, தகுந்த அடிப்படை உண்மைகளும் அடங்கலாம்.

# நாம் தொடங்கும் முன்

# பகுதி A


## மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் நான் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?

### A1. மனநலத்திறன் என்றால் என்ன?

திட்டவட்டமான ஒரு முடிவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எடுக்க ஒரு நபருக்குள்ள ஆற்றலே மனநலத்திறன் என்பதாகும்.

மனநலத்திறன் ஒவ்வொரு தனித்தனி வழக்கின் அடிப்படையிலும் மதிப்பிடுகிறது. ஒரு நபர்அவதிப்படும்ஒருகுறிப்பிட்டமருத்துவநிலையைமட்டும்அடிப்படையாககொண்டு அது அனுமானிக்கப்படக்கூடாது. மேலும், ஒரு நபரின் மனநலத்திறன் குறைபாடு கீழ்க்கண்டவற்றை மட்டும் அடிப்படையாக கொண்டிருக்க்கூடாது:

- வயது;
- ஒருவரின் புறத்தோற்றம் – இதில் குறிப்பிட்ட நிலைகளுக்கான சில உடலியல் குணாதிசயங்கள், (எடுத்துக்காட்டுக்கு, டவுன்ஸ் சிண்ட்ரம்- Down syndrome என்ற உயிரணுக் கோளாறு அல்லது மூளை நோயால் ஏற்படும் தசை இழுப்பு ஆகியவற்றுடன் இணைந்த முகத்தோற்றம்) ஆகியவற்றுடன் சேர்த்து, புறத்தோற்றத்தின் பண்புகளான ஆடை அணிவது அல்லது தூய்மை நிலை ஆகியவையும் அடங்கும்;
- நிலைமை – இதில் உடல் ஊனங்கள், வயது முதிர்வைச் சார்ந்த நோய்கள் அல்லது குடிபோதை போன்ற தற்காலிக நிலைகள் ஆகியவையும் அடங்கும்; அல்லது
- நடத்தையின் பண்பு – இதில் மற்றவர்களுக்கு அசாதரணமாக தோன்றும் நடத்தை, எடுத்துக்காட்டுக்கு, முன்னும் பின்னும் அசைந்தாடுவது, தனக்குத் தானே பேசிக்கொள்வது, அல்லது பொருத்தமற்ற வகையில் சிரிப்பது ஆகியவற்றை உள்ளடக்கலாம். பகட்டான நடத்தை எடுத்துக்காட்டுக்கு, சத்தம் போடுவதும், சைகைகள் காட்டுவதும், மற்றும் தளர்ந்தொதுங்கும் நடத்தையான பேச மறுப்பது அல்லது கண் தொடர்பைத் தவிர்ப்பது ஆகியவையும் அடங்கும்.



### A2. மனநலத்திறன் சட்டம் என்பது என்ன மற்றும் எங்களுக்கு இந்தச் சட்டம் ஏன் முக்கியமானது?

மனநலத்திறன் சட்டம் (சட்டம்) எதிர்காலத் திட்டமிடுவதற்கு மக்களுக்கு ஆற்றலை அளிக்கிறது. மனநலத்திறனை இழப்பதற்கு முன், தங்களின் எதிர்காலத்திற்குத் தேர்வுகள் செய்ய, இச்சட்டம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. 21 வயதுடையவர்கள் அல்லது அதற்கு அதிகமான வயதுடையவர்களுக்குச் சுயமாக முடிவுகள் எடுக்க வழிவகுக்கும் மனநலத்திறனில் குறைபாடு ஏற்படும் போது, இவர்களுக்காக முடிவுகள் எடுப்பதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

மேலும் இச்சட்டம்:

a. எதிர்காலத்தில் தாங்கள் மனநலத்திறனை இழந்துவிட்டாலோ மற்றும் இழக்கும் போதோ அவர்களின் சார்பாகச் செயல்படவும் முடிவுகள் எடுக்கவும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களையோ (அதிகாரம் பெறுநர்கள்) நியமிக்க ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரத்தைத் (Lasting Power of Attorney, LPA) தன்னிச்சையாகச் செய்ய அனுமதி அளிக்கிறது;

b. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் சார்பாக ஒரு முடிவைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்போது முடிவெடுக்கும் பிரதிநிதி இல்லாது போனால், செயல்படுவதற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் மற்றும் செயல்படவும் நீதிமன்றம் ஒரு துணை அதிகாரம் பெறுநரை அனுமதிக்கிறது;

c. அறிவாற்றல் ஊனமுற்ற பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர் தங்களை அவர்தம் பிள்ளைகளின் துணை அதிகாரம் பெறுர்களாகவும் தங்களுக்கு மரணம் அல்லது மனநலத்திறன் குறைபாடு நிகழும் தருவாயில் தங்களுக்குப் பின் வரும் துணை அதிகாரம் பெறுநர்களாக மற்றொரு நபரை நியமிக்கவும் நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்ய அனுமதி வழங்குகிறது;

d. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் மிகச்சிறந்த நலனுக்காக செய்யப்பட்டது என்ற நிபந்தனை உள்பட சில நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக எவரேனும் செய்யும் செயல்களுக்கு சட்டம் பாதுகாப்பை வழங்குகிறது;

e. மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகிறது; மற்றும்

f. மனநலத்திறன் குறைபாடுள்ளவர் போல் தோற்றம் அளிக்கும் ஒரு நபரின் சார்பாக ஏதேனும் முடிவெடுக்கும் அல்லது ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் எவரேனும் பின்பற்ற வேண்டிய ஐந்து சட்டபூர்வ நெறிகளைக் கொண்டுள்ளது.

ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சில முடிவுகள் எடுப்பதற்கான திறன் இருக்கலாம். ஆனால் இது மற்ற முடிவுகளுக்குப் பொருந்தாது. உதாரணத்திற்கு, சந்தைக்குச் சென்று உணவு வாங்குவதற்கு ஒருவருக்குத் திறமை இருக்கலாம். ஆனால் பெரிய பணத்தொகைகளை கையாளுவதற்கோ, முதலீடு முடிவுகளை எடுக்கவோ அவரால் இயலாமல் போகலாம். மனநலத்திறன் காலத்தோடு முன்னேறலாம் அல்லது தரங்குறையலாம்.

## A3. நடைமுறை வழக்குத் தொகுப்பு

நடைமுறை வழக்குத் தொகுப்பு மனநலத்திறன் சட்டத்தை விளக்குகிறது. நடைமுறையில் சட்டம் எப்படி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றி அது மேலும் தெளிவாக்குகிறது.

மக்களுக்குக் கீழ்க்கண்ட வகைகளில் உதவுகிறது:

- சட்டத்தின் கீழ் அவர்களுடைய பங்கையும் பொறுப்புகளையும் புரிந்து கொள்வதற்கு;
- எதிர்காலத்தில் அவர்களுக்குத் திறன் குறைபாடு ஏற்படும் சூழ்நிலைக்கு ஆயத்தமாக, நீங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைப் புரிந்து கொள்வதற்கு; மற்றும்
- மனநலத்திறன் குறைந்தவர்களைப் பராமரிக்கும்போது பயன்படுத்தப்பட வேண்டிய கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கு.

மனநலத்திறன் குறையுள்ளவருடன் இணைந்து செயல்படும் ஒவ்வொருவருக்கும் நடைமுறை வழக்கத்தொகுப்பு ஆகச்சிறந்த நடைமுறைகளுக்கான ஒரு வழிகாட்டியாகும். பராமரிப்பு அளிக்க, விதிமுறைப்படி கடமைப்பட்டிருப்பவர்களை, அதாவது, நிபுணர்கள் போன்றவர்களை இது உள்ளடக்கும். ஊதியம் பெறும் பராமரிப்பாளர்களையும், மற்றும் விதிமுறையின் வரம்பினுள் இருக்கும் பராமரிப்பாளர்களையும் - அதாவது, திறன் குறைந்தவரின் குடும்பத்தையும் நண்பர்களையும் இது உள்ளடக்கும்.

மனநலத்திறன் குறைந்தவருக்குச் செயல்படும்போது கீழ்காணப்படும் நபர்கள் நடைமுறை வழக்கத்தொகுப்பை கருத்தில் கொள்ளவேண்டும்:

a. ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) யின் அதிகாரம் பெறுநர்;

b. நீதிமன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட துணை அதிகாரம் பெறுநர்;

c. நிபுணத்துவ ரீதியில் செயல்படுபவர்கள், உதாரணத்திற்கு, வழக்குரைஞர், சுகாதார பராமரிப்பு நிபுணர், கணக்காளர், நடமாடும் மருத்துவமனை பணியாளர்கள்; மேலும்

d. ஊதியத்திற்காகச் செயல்படுபவர்கள், உதாரணத்திற்கு, ஊதியம் பெறும் பராமரிப்பாளர், மருத்துவச் சிகைச்சயாளர்.

நடைமுறை வழக்கத்தொகுப்பின் வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும்.

## A4. நீண்டகால அதிகாரப் பத்திரம்

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) ஒரு சட்ட ஆவணம். மனநலத்திறன் உள்ள 21 வயதுடையவருக்கு அல்லது அதற்கு அதிகமான வயதுடையவருக்கு (அதிகாரம் வழங்குநர்) , தன்னிச்சையாக ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான நபர்களைச் தேர்வு செய்ய (அதிகாரம் பெறுநர்/பெறுநர்கள்) அனுமதிக்கிறது. எதிர்காலத்தில் அவருக்கு மனநலத்திறன் குறையும்போது, தேர்வு செய்யப்பட்டவர்கள், தனியாள் நலன் காரியங்களிலும் இவருடைய சார்பில் முடிவுகளும் எடுக்கலாம், செயல்படலாம்.

பொதுவாக அதிகாரப் பத்திரம், அதிகாரம் வழங்குநர் மனநலத்திறனை இழக்கும்போது பலனிழக்கிறது. இது போலல்லாமல் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) அதிகாரம் வழங்குநர் திறன் இழக்கும்போது, அமலாகிறது. ஒருவர் இம்மாதிரியான சாத்தியமான நிகழ்வுக்குத் திட்டமிட நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) அனுமதிக்கிறது.

நபர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இரு வெவ்வேறு வரையறுக்கப்பட்ட நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) படிவங்கள் இருக்கின்றன:

1. LPA படிவம் 1 அதிகாரம் வழங்குநர்கள் தங்களுடைய அதிகாரம் பெறுநர்களுக்குப் பொதுவான அதிகாரங்களை அளிப்பதற்கு, இது பெரும்பாலும் தேர்வுபெட்டிகளைக் கொண்டுள்ளது. இந்த அதிகாரங்களுக்கான அடிப்படை நிபந்தனைகளையும் தேர்ந்தெடுப்பதற்காக அதிகாரம் வழங்குநர்களுக்குத் தேர்வுரிமை அளிக்கப்படும். இந்த படிவம் அதிகாரம் வழங்குநர்களால் சுயமாகப் பூர்த்திசெய்யப்படலாம்.
2. LPA படிவம் 2 பெரும்பாலும் காலியான பகுதிகளைக் கொண்டுள்ளது. நபர்கள், தங்களின் தேவைகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட அதிகாரங்களை இப்பகுதிகளை குறிப்பிடலாம். இப்படிவம் ஒரு வழக்குரைஞரால் வரைவு செய்யப்பட வேண்டும்.

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) அதிகாரம் வழங்குநருக்குத் திறனுள்ளபோது, அவரால் செய்யப்படும். இருப்பினும், அதிகாரம் வழங்குநர் மனநலத்திறனை இழக்கும் நேரம் வரை, நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) யின் கீழ், அதிகாரம் பெறுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அமலாகாது.

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) யில் கீழ்க்கண்டவற்றுடன் சம்மந்தப்பட்ட முடிவுகள் வழங்கப்படுகின்றன.

a. தனியாள் நலன் (பராமரிப்பு, எங்கு வசிப்பது போன்ற முடிவுகளை அனுமதிக்கிறது), மற்றும்

b. சொத்து மற்றும் அலுவல் (வங்கிகளுடனான வணிகத் தொடர்பு, மத்திய சேபிப்பு நிதி விவகாரங்கள், சொத்தை விற்பது, போன்றவற்றைப்பற்றி அதிகாரம் பெறுநர் முடிவுகள் எடுக்க அனிமதிக்கிறது).

# பகுதி B

## பொது காப்பாளர் அலுவலகம் என்ன செய்யும்?

### B1. பொதுக் காப்பாளர்

மனநலத்திறன் குறைபாடுள்ள, எளிதில் பாதிக்கப்படக்கூடிய தனி நபர்களின் கண்ணியம் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொதுக் காப்பாளர் செயல்படுகிறார். அவர் பொதுக் காப்பாளர் அலுவலகத்தின் தலைவரும் ஆவார்.

### B2. பொதுக் காப்பாளரின் பணிகள்

மனநலத்திறன் குறைபாடுள்ள நபர்களை இயலச்செய்வதையும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதையும் நோக்கிச் செயல்படும் பலதரப்பட்ட பணிகளைப் பொதுக் காப்பாளர் செய்கிறார்.

இப்பணிகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும்:

a. நீண்டகால அதிகாரப் பத்திரங்களுக்கான ஒரு பதிவேட்டையும் துணை அதிகாரம் பெறுநர்களை நியமிக்கும் நீதிமன்ற ஆணைகளுக்கான பதிவேட்டையும் பேணுவது;

b. துணை அதிகாரம் பெறுநர்களை மேற்பார்வை செய்வது;

c. துணை அதிகாரம் பெறுநர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது; மேலும்

d. மனநலத்திறன் சட்டத்தின் கீழ் உள்ள ஏதேனும் விதி மீறப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டை விசாரிப்பது. இதில் அதிகாரம் பெறுநர்களும், துணை அதிகாரம் பெறுநர்களும் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தும் முறையைக் குறித்த புகார்களும் அடங்கும்.

### B3. பொதுக் காப்பாளர் அலுவலகம்

- பொதுக் காப்பாளர் அலுவலகத்தின் பொதுக் காப்பாளர் தன் பணிகளைச் செயல்படுத்த ஆதரவளிக்கிறது.
- பொதுக் காப்பாளர் அலுவலகம் சமுதாய, குடும்ப மேம்பாடு அமைச்சின் ஒரு பிரிவு ஆகும்..

### B4. வருகையாளர் குழுவின் பங்குகள்

வருகையாளர் குழுவின் பங்குகள் பின்வருமாறு:

- பொதுக் காப்பாளரின் அல்லது நீதிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களையும், அதிகாரம் பெறுநர்களையும் மற்றும் துணை அதிகாரம் பெறுநர்களையும் சென்று பார்ப்பது, மற்றும்
- மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு நபரின் நலனைக் கண்டறிவது.

இரண்டு வகை வருகையாளர்கள் உள்ளனர்:

a. சிறப்பு வருகையாளர்கள் – பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் அல்லது மன அல்லது மூளைச் செயல்பாட்டில் ஏற்படும் சேதம் அல்லது குழப்ப நிலை போன்றவற்றைக் குறித்து தகுந்த ஆழ்ந்த அறிவு உள்ளவர்கள், மற்றும்

b. பொது வருகையாளர்கள் – மருத்துவம் சார்ந்த தேர்ச்சி பெற்றிருக்கும் அவசியம் இல்லாதவர்கள்.



# பகுதி C

## அதிகாரம் பெறுநராக நான் தேர்வு செய்யப்படும்போது என்ன நிகழும்?

### C1. இரு வகை அதிகாரம் பெறுநர் யாவை?

நீண்டகால அதிகாரப் பத்திரம் (Lasting Power of Attorney, LPA) அதிகாரம் வழங்குநர், அதிகாரம் பெறுநருக்கு, முடிவுகள் எடுக்க அதிகாரம் வழங்கலாம். இம்முடிவுகள் அதிகாரம் வழங்குநரைப் பற்றியது:

- தனியாள் நலன் (சுகாதார பராமரிப்பு முடிவுகள் உள்பட) மற்றும்/அல்லது
- சொத்து மற்றும் அலுவல் விவகாரங்கள் (நிதி விவகாரங்கள் உள்பட).

### C2. தனியாள் நலன் அதிகாரம் பெறுநர்

தனியாள் நலன் அதிகாரம் பெறுநர், நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - வில் கையொப்பமிடுவதற்கு, குறைந்த பட்சம் 21 வயதுடையவராக இருக்கவேண்டும்.

உதாரணத்திற்கு, "ஃபியோன ஃபெர்னெண்டிஸ்", ஒரு வேலையின் தலைப்பாக இருக்ககூடாது; உதாரணத்திற்கு, "என் வழக்குரைஞர்". ஒரு நிறுவனம் அல்லது வணிகம், தனியாள் நலன் அதிகாரம் பெறுநராகத் தேர்வு செய்யமுடியாது.

#### எனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் யாவை?

பொதுவாக, தனியாள் நலன் அதிகாரம் பெறுநர், அதிகாரம் வழங்குநரின் சார்பில் எடுக்க உதவுகிறார். இம்முடிவுகள், அதிகாரம் வழங்குநர் எங்கு வசிக்க வேண்டும் மற்றும் அவருடைய அன்றாட நடவடிக்கைகள் போன்ற விவர்காரங்களின் தொடர்பாக இருக்கும்.

தனியாள் நலன் அதிகாரம் பெறுநர் எம்மாதிரியான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என்பதை கீழ்க்கண்டவை உள்ளடக்கும்:

- அதிகாரம் வழங்குநர் எங்கு வசிக்க வேண்டும்;
- அதிகாரம் வழங்குநர் யாருடன் வசிக்க வேண்டும்;
- அன்றாட பராமரிப்பு முடிவுகள் (உதாரணத்திற்கு, என்ன அணிந்துகொள்வது மற்றும் உண்ணுவது);
- எந்த சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்வது;
- அதிகாரம் வழங்குநரின் தனிப்பட்டக் கடிதத் தொடர்பை கையாளுவது; மற்றும்
- அதிகாரம் வழங்குநர் யாருடன் தொடர்பு வைத்திருக்கலாம்.

மேல் காணப்படும் பட்டியல் தனியாள் நலன் அதிகாரம் பெறுநர் எம்மாதிரியான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என்பதைப்பற்றி சில உதாரணங்களைக் கொண்டுள்ளது. ஆனால் இது முழுமையான பட்டியல் அல்ல.

## C3. ஒரு தனியாள் நலன் அதிகாரம் பெறுநராக நான் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் யாவை?

### செய்யக்கூடியவை

ஒருநீண்டகாலஅதிகாரப்பத்திரம்(LPA)-வின்கீழ்அனைத்துஅதிகாரம்பெறுநர்களும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் முக்கியமான பங்கு வசிக்கின்றனர். இது தனியாள் நலன் அதிகாரம் பெறுநர்களுக்கும் சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்களுக்கும் பொருந்தும்.

நீங்கள்:

- சட்டபூர்வமான நெறிகளைப் பின்பற்ற வேண்டும்;
- அதிகாரம் வழங்குநருக்கு மிகச்சிறந்த நலன்கள் ஏற்படும் வகையில் செயல்பட வேண்டும்;
- நடைமுறை வழக்குத் தொகுப்பின் வழிகாட்டிக்கு மதிப்பளிக்க வேண்டும்;
- அதிகாரம் வழங்குநரின் ஆணைகளை நிறைவேற்ற வேண்டும். நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வழங்கியிருக்கும் அதிகாரத்தின் வரம்புக்குள் முடிவுகள் எடுக்க வேண்டும்;
- நியாயமான அளவில் கவனத்துடனும் திறமையுடனும் உங்களுடைய கடமைகளை ஆற்றவேண்டும்;
- நல்லெண்ணத்தில் செயல்படவேண்டும்;
- அந்தரங்கத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்; மேலும்
- குறிப்பு அறிக்கைகளை வைத்திருக்க வேண்டும்.



### செய்யக்கூடாதவை

அதிகாரம் பெறுநர்கள் கருத்தில் கொள்ளவேண்டிய சில முக்கிய கூறுகள் இதோ:

- உங்களுடைய பதிவியை உங்கள் சுய லாபத்திற்குப் பயன்படுத்தாதீர்கள்;
- உங்களுடைய அதிகாரத்தை வேறொருவருக்கு வழங்காதீர்கள்; மேலும்
- அதிகாரம் வழங்குநர் மற்றும் பொதுக் காப்பாளர் அலுவலகத்திடம் தெரிவிக்காமல் இப்பங்கை துறக்காதீர்கள்.

அதிகாரம்பெறுநர்செய்யகூடியவற்றைப்பற்றியும்செய்ய்யகூடாதவற்றைப்பற்றியும் கூடுதலான வழிகாட்டிகளுக்கு நடைமுறை சட்டத்தின் 8.5 - ஆவது பத்தியை நீங்கள் பார்க்க வேண்டும்.

தனியாள் நலன் குறித்து முடிவுகளை எடுக்க நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரம் பெறுநர் (தனியாள் நலன் அதிகாரம் பெறுநர்) அதிகாரம் வழங்குபவரின் நிதிநிலைமையை குறித்த முடிவுகளை எடுக்க முடியாது, அதே அதிகாரம் பெறுநர் அதிகாரம் வழங்குபரின் சொத்து மற்றும் அலுவல் குறித்து முடிவுகள் எடுக்கவும் நியமிக்கப்பட்டிருந்தால் தவிர.

அதிகாரம் வழங்குநர் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யில் தெளிவாகக் குரிப்பிட்டால் மட்டுமே, சுகாதார பராமரிப்பு (இது மருத்துவ சோதனையை உள்ளடக்கும்) வழங்கும் எந்த ஒரு நபருக்கும், சிகிச்சையை அளிக்க அல்லது தொடர, தனியாள் நலன் அதிகாரம் பெறுநர் சம்மதிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

இருப்பினும், உயிர் வாழ் சிகிச்சையை மறுக்கவோ, அதிகாரம் வழங்குநரின் உடல்நிலையில் ஆபத்தான சீர்குலைவைத் தடுக்கத் தேவையான வேரு எந்த சிகிச்சையை மறுக்கவோ ஒரு தனியாள் நலன் அதிகாரம் பெறுநருக்கு அதிகாரம் இல்லை. நோயாளிக்கான மிகச்சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு மருத்துவர் வழக்கமாக இந்த முடிவுகளை எடுப்பார்.

அதிகாரம் இன்னமும் திறன் உள்ள வேளையில், முன்னோடி மருத்துவக்கட்டளை சட்டத்திற்கு இணங்க, ஒரு முன்னோடி மருத்துவக் கட்டளையச் (எ.எம்.டி) செய்திருந்தால், மருத்துவர்கள் எ.எம்.டி - க்கு இணங்கியாக வேண்டும்.

## C4. மற்ற கட்டுப்பாடுகள்

அதிகாரம் வழங்குநர் திறன் குன்றியிருந்தால், அல்லது அவர் முடிவுகளை எடுப்பதில் திறன் குன்றியிருக்கிறார் என்று நீங்கள் நியாயமாக நம்பினால் மட்டுமே, நீங்கள் அதிகாரம் வழங்குநரின் சார்பாக அந்த முடிவுகளை எடுக்கலாம். அதிகாரம் வழங்குநரைப் பாதுகாக்க, கீழ்க்காணப்படும் முடிவுகளில் எந்த ஒரு முடிவையும் அதிகாரம் வழங்குநரின் சார்பாக எடுக்க, சட்டம் உங்களை அனுமதிக்காது:

### மருத்துவ விவகாரங்கள்

- அதிகாரம் வழங்குநர் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யில் தெளிவாகக் குறிப்பிட்டால் மட்டுமே, சுகாதார பராமரிப்பு (இது மருத்துவ சோதனையை உள்ளடக்கும்) வழங்கும் எந்த ஒரு நபருக்கும், சிகிச்சையை அளிக்க அல்லது தொடர, நீங்கள் சம்மதிக்கலாம்.
- கீழ்க்காணப்படும் சிகிச்சைகளை நடத்துவது அல்லது அவற்றைத் தொடர்வது சம்மந்தமாக நீங்கள் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாது:
  - அதிகாரம் வழங்குநருக்கு உயிர் வாழ் சிகிச்சை - முன்னோடி மருத்துவ கட்டளை சட்டத்தின் 2-ஆவது பிரிவின் பொருளின் வரையறைக்குள், இது வழக்கமற்ற உயிர் வாழ் சிகிச்சையா இல்லயா, அல்லது
  - அதிகாரம் வழங்குநரின் உடல்நிலையில் ஆபத்தான சீர்குலைவைத் தடுக்கத் தேவைப்படும் என்று சுகாதார பரமாரிப்பு வழங்குநர் நியாயமாக நம்பும், வேறு எந்த ஒரு சிகிச்சை.

நோயாளிகளுக்கான மிகச்சிறந்த நன்மைகள் என்ன என்பதை முடிவெடுக்க, தங்களுடைய நிபுணத்துவ கடமையினால் ஆளப்படும் மருத்துவர்கள், இம்த முடிவுகளை எடுப்பார்கள்.

### அடக்குமுறையை உபயோகித்தல்

அதிகாரம் பெறுநர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அடக்குமுறை ஒருவர், அதிகாரம் வழங்குநர் சுதந்தரமாக நகர்வதைக் கட்டுப்படுத்தினால், அவர் அதைத்தடுத்தாலும் தடுக்காவிட்டாலும், அது அடக்குமுறை என்பதாகும்.

உண்மையான உடல் ரீதியான கட்டாயம் பயன்படுத்தப்பட்டாலும்., அல்லது உடல் ரீதியான கட்டாயம் அச்சுறுத்தப்ப்படாவிட்டாலும் ஒரு செயல் அடக்குமுறையாகக் கருதப்படலாம்.

நீங்கள் அடக்குமுறையைப் பயன்படுத்தக்கூடாது. இதற்கு விதிவிலக்கு:

- அதிகாரம் வழங்குநர் துன்பத்தில் தவிப்பதை தடுக்க, அடக்குமுறை செயல் அவசியமானது என்று நீங்கள் நியாயமாக நம்பினால், மற்றும்
- அதிகாரம் வழங்குநர் துன்பத்தில் தவிப்பதற்கும் அத்துன்பத்தின் கடுமையளவிற்கும், அடக்குமுறை செயல் சமமாக இருக்கவேண்டும்.

## C5. விலக்கப்பட்ட முடிவுகள் யாவை?

இந்தச்சட்டம், மனநலத்திறன் குறைந்தவரின் சார்பில் சில முடிவுகளை எடுக்க அனுமதிக்காது.

இம்முடிவுகள் பின் வருமாறு:

| | |
|---|---|
| a. | திருமணத்திற்குச் சம்மதிப்பது |
| b. | பாலியல் இயல்பில் தொடுவதற்குச் சம்மதிப்பது |
| c. | மூன்று வருட பிரிவின் அடிப்படையில் மணவிலக்குக்குச் சம்மதிப்பது |
| d. | தத்தெடுப்பு உத்தரவு செய்வதற்குச் சம்மதிப்பது |
| e. | ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வது அல்லது துறப்பது |
| f. | பாலின் மாற்றத்துக்குச் சிகிச்சை பெறுவது |
| g. | பாலியல் நோய் நுண்மங்களை அழிப்பதற்கான சிகிச்சைக்குச் சப்பதிப்பது, அல்லது சம்மதத்தை மீட்டுக்கொளவது |
| h. | கருச்சிதைவுக்குச் சம்மதிப்பது, அல்லது சம்மதத்தை மீட்டுக்கொள்வது |
| i. | மரணமடைந்த எந்த ஒரு நபரிடமிருந்தும் உறுப்பை அகற்றுவது சம்மந்தமாக ஆட்சேபணையை பதிவு செய்வதும், பின் வாங்குவதும் |
| j. | முன்னோடி மருத்துவக்கட்டளையைச் செய்வதும், மீட்டுக்கொள்வதும் |
| k. | உடலையோ அல்லது உடலின் எந்த ஒரு உறுப்பையோ அன்பளிப்பாக அளிப்பது அல்லது அதை மீட்டுக்கொள்வது. |

## C6. தனியாள் நலன் அதிகாரம் பெறுநராக எனது அதிகாரங்கள் எப்போது முடிவுபெறும்?

உங்கள் நியமனம் எப்போது ரத்தாகுமென்றால்:

- அதிகாரம் வழங்குநர் அல்லது நீங்கள் மரணமடைந்தால்;
- அதிகாரம் வழங்குநருக்கும் உங்களுக்கும் இடையில் நிகழ்ந்த திருமணம் கலைக்கப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால், LPA உங்களுடைய வேலை அமர்த்தலை ரத்து செய்யாது என்று குறிப்பிடவேண்டும்;
- அதிகாரம் பெறுநராக நீங்கள் தேர்வு செய்யப்பட்டதை, அதிகாரபூர்வமாக நீங்கள் மறுத்தால்; அல்லது
- உங்களுக்கு மனநலத்திறன் குன்றியிருந்தால்.

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) ஒருவருக்கு மேற்பட்டு அதிகமானவர்களை அதிகாரம் பெறுநராக கூட்டாகச் செயல்பட நியமித்திருந்து, அவர்களில் ஒருவருக்கு அதிகாரம் ரத்து செய்யப்பட்டால், நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வழங்கிய அதிகாரம் ரத்து செய்யப்படும்.

இருப்பினும், LPA வழங்கிய அதிகாரம் எப்போது ரத்து செய்யபடாமல் தொடர்ந்து நடப்பில் இருக்கும் என்றால் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யின் கீழ் நடப்பில் இருக்கும் அதிகாரம் பெறுநருக்குப் பதிலாக மற்றொரு அதிகாரம் பெறுநர் தேர்வு செய்யப்பட்டால், அல்லட்து எந்த ஒரு விவகாரத்திலும் கூட்டாகவோ தனித்தோ செயல்பட தேர்வு செய்யப்பட்டிருக்கும், உயிருடன் இருக்கும் ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான அதிகாரம் பெறுநர்கள் இருந்தால்.

## C7. சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்

பொதுவாக, வங்கிக்கணக்கு நடவடிக்கைகள் மற்றும் சொத்து போன்ற விவகாரங்கள் சம்மந்தமாக, அதிகாரம் வழங்குநரின் சார்பில் முடிவுகள் எடுக்க, சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர் உதவுகிறார்.

### எனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பொறுப்புகள் யாவை?

கீழ்க்காணப்படும் வகையான முடிவுகளை எடுப்பதற்கு, உங்களுக்கு அதிகாரம் வழங்கப்படலாம்:

- சொத்து தொடர்புள்ள - சொத்து வாங்குவது, விற்பது, வாடகைக்குக் கொடுப்பது/எடுப்பது, மற்றும் அடைமானம் வைப்பது;
- வங்கிக்கணக்குகளை திறப்பது, மூடுவது மற்றும் இயக்குவது;
- அதிகாரம் வழங்குநரின் சார்பில், லாபத்தில் கிடைக்கும் பங்குகள், வருவாய், மரபுரிமையான அனுகூலங்கள், அல்லது மற்ற நிதி தொடர்பான உரிமைகளைப் பெறுவது;
- வரி விவகாரங்களைக் கையாளுவது;
- வாடகை, அடைமானக்கட்டணங்கள், மற்றும் குடும்பத்திற்கான செலவுகளுக்குப் பணம் அளிப்பது;
- அதிகாரம் வழங்குநரின் பணத்தை முதலீடு செய்வது; மற்றும்
- அதிகாரம் வழங்குநருக்குத் தேவையான வாகனத்தை அல்லது மற்ற கருவியை வாங்குவது.

மேல் காணப்படும் பட்டியல் நீங்கள் எம்மாதிரியான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என்பதைப்பற்றி சில உதாரணங்களைக் கொண்டுள்ளது. ஆனால் இது முழுமையான பட்டியல் அல்ல.

## C8. சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநராக நான் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் யாவை?

### செய்யக்கூடியவை

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) -யின் கீழ் உங்கள் கடமைகளை ஆற்றுவதில் நீங்கள் முக்கிய பங்கு வகிக்கிறீர்கள்.

C3 பிரிவில் தனியாள் நலன் அதிகாரம் பெறுநர் பின்பற்ற வேண்டிய அதே செயல்களை நீங்கள் பின்பற்ற வேண்டும். கூடுதலாக, நீங்கள்:

- கணக்குகள் வைத்திருக்க வேண்டும், மேலும்:
- உங்கள் சொந்த கணக்கிலிருந்து, அதிகாரம் வழங்குநரின் பணம் மற்றும் சொத்தை பிரித்து வைக்க வேண்டும்.

### செய்யக்கூடாதவை

அதிகாரம் வழங்குநர் திறன் குன்றியிருந்தால், அல்லது அவர் முடிவுகளை எடுப்பதில் திறன் குன்றியிருக்கிறார் என்று நீங்கள் நியாயமாக நம்பினால் மட்டுமே, நீங்கள் அதிகாரம் வழங்குநரின் சார்பாக அந்த முடிவுகளை எடுக்கலாம்.

சொத்து மற்றும் அலுவல் குறித்து முடிவுகளை எடுக்க நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரம் பெறுநர் (சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்) அதிகாரம் வழங்குபவரின் தனியாள் நலன் குறித்த முடிவுகளை எடுக்க முடியாது, அதே அதிகாரம் பெறுநர் அதிகாரம் வழங்குநரின் தனியாள் நலன் முறித்து முடிவுகள் எடுக்கவும் நியமிக்கப்பட்டுருந்தால் தவிர.

அதிகாரப் வழங்குநரைப் பாதுகாக்க, பின்வரும் முடிவுகளில் எந்த ஒரு முடிவையும் அவருடைய சார்பில் நீங்கள் எடுக்க, சட்டம் உங்களை அனுமதிப்பதில்லை:

### உயில்கள், காப்புறுதி, மற்றும் மத்திய சேமிப்பு நிதி விவகாரங்கள்

- பின்வரும் எவற்றையும் அதிகாரம் வழங்குநரின் சார்பில் நீங்கள் செய்ய முடியாது:
  - உயிலைச் செயலாற்ற;
  - அவருடைய காப்புறுதி கொள்கைக்காக ஒரு நியமனத்தை செய்யவோ, மீட்டுக்கொள்வதோ; அல்லது
  - அவருடைய மத்திய சேமிப்பு நிதி கணக்குகளுக்கு நியமனத்தைச் செய்யவோ மீட்டுக்கொள்ளவோ.

### அன்பளிப்புகள்

- அதிகாரம் வழங்குநர் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யில் குறிப்பாக உங்களுக்கு அங்கீகாரம் அளித்தாலே ஒழிய, அதிகாரம் வழங்குநரின் சொத்திலிருந்து நீங்கள் அன்பளிப்புகள் அளிக்க முடியாது.
- அதிகாரம் வழங்குநர், அன்பளிப்புகள் வழங்க, அதிகாரம் பெறுநருக்கு அங்கீகாரம் அளிக்கும்போது, அதிகாரம் வழங்குநர் அன்பளிப்புகளின் மதிப்பை அல்லது வழங்கவேண்டிய அன்பளிப்புகளை நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) -யில் குறிப்பிடலாம்.
- அதிகாரம் வழங்குநர் அன்பளிப்புகளின் மதிப்பை குறிப்பிடாமல் இருந்தால், நீங்கள் அன்பளிப்புகள் வழங்கும்போது:
  - அன்பளிப்புகள் மதிப்பு நியாயமற்றதாக இருக்கக்கூடாது என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்; அனைத்துச் சூழ்நிலைகளையும், குறிப்பாக அதிகாரம் வழங்குநரின் சொத்தளவை மனதில் வைத்திருக்க வேண்டும், மற்றும்
  - அதிகாரம் வழங்குநரின் சொத்து, அவருடைய வாழ்நாளில் அவரைப் பராமரிப்பதற்காகக் கட்டிக்காக்கப்படவேண்டும்.



## கே. சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநராக எனது அதிகாரங்கள் எப்போது முடிவுபெறும்?

உங்கள் நியமனம் எப்போது இரத்தாகுமென்றால்:

- அதிகாரம் வழங்குநர் அல்லது நீங்கள் மரணமடைந்தால்;
- அதிகாரம் வழங்குநர் அல்லது நீங்கள் நொடிப்புநிலைக்கு ஆளானால்;
- நிதி நிறுவனமான நீங்கள், உங்களுடைய உரிமம் காலவதியானால், அல்லது மீட்டுக்கொள்ளப்பட்டால், அல்லது கலைக்கப்பட்டால், அல்லது முற்றுகையிடப்பட்டால், அல்லது நீதி நிர்வாகத்தின் கீழ் இருந்தால்;
- அதிகாரம் வழங்குநருக்கும் உங்களுக்கும் இடையில் நிகழ்ந்த திருமணம் கலைக்கப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால், நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) உங்களுடைய வேலை அமர்த்தலை ரத்து செய்யாது என்று குறிப்பிடவேண்டும்;
- நீங்கள் அதிகாரம் பெறுநராக தேர்வு செய்யப்பட்டதை அதிகாரபூர்வமாக மறுத்தால்; அல்லது
- உங்களுக்கு மனநலத்திறனில் குறைபாடு இருந்தால்.

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) ஒருவருக்கு மேற்பட்டு அதிகமானவர்களை அதிகாரம் பெறுநராக கூட்டாகச் செயல்பட நியமித்திருந்து, அவர்களில் ஒருவருக்கு அதிகாரம் ரத்து செய்யப்பட்டால், நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வழங்கிய அதிகாரம் ரத்து செய்யப்படும்.

இருப்பினும், நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வழங்கிய அதிகாரம் எப்போது ரத்து செய்யபடாமல் தொடர்ந்து நடப்பில் இருக்கும் என்றால் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யின் கீழ் நடப்பில் இருக்கும் அதிகாரம் பெறுநருக்குப் பதிலாக மற்றொரு அதிகாரம் பெறுநர் தேர்வு செய்யப்பட்டால், அல்லட்து எந்த ஒரு விவகாரத்திலும் கூட்டாகவோ தனித்தோ செயல்பட தேர்வு செய்யப்பட்டிருக்கும், உயிருடன் இருக்கும் ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான அதிகாரம் பெறுநர்கள் இருந்தால்.

## Q10. மற்ற கேள்விகள்

### அதிகாரம் பெறுநராக என்னை நியமிக்கக் கோரும் விண்ணப்பத்தை நான் மறுக்கலாமா?

ஆம். அதிகாரம் வழங்குநர் உங்களை ஓர் அதிகாரம் பெறுநராக தேர்வு செய்ய விரும்புகிறார் என்பதை உங்களிடம் தெரிவிக்க வேண்டும். நீங்களும் அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் தேர்வு செய்யப்பட்டதில் உங்களுக்கு விருப்பம் இல்லாதபோது, நீங்கள் மறுப்புத் தெரிவிக்கலாம்.

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யில் காணப்படும், புரிந்துணர்வு உடன்பாட்டில், நீங்கள் கையொப்பமிட வேண்டும். நீங்கள் தேர்வு செய்யப்பட்டதை ஏற்கவில்லையென்றால், நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) முழுமையாகாது. இதனால், அதிகாரம் பெறுநர் என்ற உங்களுடைய தகுதி செல்லுபடி ஆக்குப்படாது.

### ஒன்றுக்குக் கூடுதலான அதிகாரம் பெறுநர்களை தேர்வு செய்யலாமா?

ஆம். அதிகாரம் வழங்குநர் ஒன்று அல்லது ஒன்றுக்கு கூடுதலான அதிகாரம் பெறுநர்களை நியமிக்கலாம்.

வேறொரு அதிகாரம் பெறுநருடன் இணைந்து நீங்கள் செயல்படவேண்டியிருந்தால், நீங்கள் இருவரும் ஒன்று கூடிச் செயல்படுவதே சிறந்ததாகும். அப்போது தான், கருத்து வேறுபாடு நிகழும்போது, இணக்கமான தீர்வுகளைக் காணலாம். இதன் மூலம் முட்டுக் கட்டைகளைத் தவிர்க்கலாம்.

## Q11. ஒரு அதிகாரம் பெறுநர் எப்படி முடிவுகளை மேற்கொள்ளவேண்டும் மற்றும் செயல்படவேண்டும்?

ஒரே காரியத்தில் செயல்படுவதற்காக ஒருவருக்கு மேற்பட்டு அதிகமானவர்களை அதிகாரம் பெறுநர்களாக கீழ்க் காணும் முறைப்படி அதிகாரம் வழங்குநர் தேர்வு செய்யலாம்:

- கூட்டாக: அதிகாரம் பெறுநர்கள் ஒன்றாகவே செயல்பட வேண்டும். தனியாக செயல்படகூடாது.
- கூட்டாகவும் தனித்தனியாகவும்: ஒன்றாகவும் அல்லது தனித்தனியாகவும் செயல்படலாம். இந்த முறையில் செயல்பட்டாலும் ஏற்கத்தக்கதாகும்.

ஒருவருக்கும் மேற்பட்ட அதிகாரம் பெறுநர்களை, அதிகாரம் வழங்குநர் தேர்வு செய்திருந்து, ஆனால் முடிவுமேற்கொள்ளும் முறையைக் குறிப்பிடாத பட்சத்தில், அதிகாரம் பெறுநர்கள் அனவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதே சட்டத்தின் அனுமானமாகும்.

## Q12. அதிகாரம் பெறுநராக நான் எப்படி பாதுகாக்கபடுவேன்?

அதிகாரம் பெறுநராக உங்களுக்கு, மனநலத்திறன் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்படும்.

அதிகார அளிப்பு பிறப்பிக்கபடாத நிலையில் உங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்ற நீங்கள் நினைத்து முடிவு எடுத்திருந்தால், அதற்கு நீங்கள் பொறுப்பல்ல, பின்வரும் சூழ்நிலைகளில் தவிர:

- நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) பிறப்பிக்கப்படவில்லை என்று உங்களுக்கு தெரிந்திருந்தபோது, அல்லது
- நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) பிறப்பிக்கட்டிருந்தாலும், உங்களின் அதிகாரம் பெறுநருக்குரிய தகுதி முடிவு பெற்றுள்ளது என்று நம்புவுதற்கு உங்களிடம் ஏதேனும் காரணங்களோ சூழ்நிலைகளோ தெரிந்திருந்தபோது.

இது, தனியாக செயல்படும் அதிகாரம் பெறுநர்களுக்கும், அல்லது கூட்டாகவும் மற்றும்/அல்லது தனித்தனியாகவும் செயல்படுவோர்க்கும் பொருந்தும்.

# பகுதி D

## அதிகாரம் பெறுநராக நான் என்ன முடிவுகளை மேற்கொள்ள முடியும்?

### D1. என்ன முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் மற்றும் எப்போது முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்?

a. அந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு குறைவான திறன் கொண்டவராக அதிகாரம் வழங்குநர் இருந்தால் மட்டுமே, நீங்கள் அவருக்காக முடிவுகளை மேற்கொள்ளலாம்.

b. நீண்டகால அதிகாரப் பத்திரம் நீண்டகால அதிகாரப் பத்திரம் (Lasting Power of Attorney, LPA) பெறுநர் உங்களுக்கு அளித்த அதிகாரப்படித்தான், நீங்கள் முடிவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவீர்கள் .

c. பின்வரும் சூழ்நிலைகள் தொடர்பான தகவல், உங்களுக்குத் தெரிந்திருந்தால் முடிவு மேற்கொள்ளக்கூடாது:

- அதிகாரம் வழங்குநருக்கு மனநலக் குறைபாடு இல்லை அல்லது அதிகாரம் வழங்குநருக்கு மனநலக் குறைபாடு உண்டு என்று நீங்கள் நியாயமாக நம்பாத போது;
- நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) பிறப்பிக்கபடவில்லை (உதாரணத்திற்கு, அதிகாரம் வழங்குநர் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யில் கையொப்பம் இட்டபோது அதிகாரம் வழங்குநருக்கு திறன் இல்லை என்று உங்களுக்கு தெரிந்திருந்தால்); அல்லது
- முடிவு மேற்கொள்ளும் உங்க்களின் அதிகாரம் முடிவு பெற்றுவிட்டது என்ற நிலைமை உங்களுக்குத் தெரிந்திருந்தபோது.

### D2. எந்த கட்டத்தில் தலையிட்டு முடிவெடுக்க வேண்டும் என்பது எனக்கு எப்படித் தெரியும்?

நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) - யைப் பதிவு செய்த பிறகும், அதிகாரம் பெறுநர் மனநலத்திறன் ஆற்றல் கொண்டவராகத் தொடர்ந்து இருக்கும் வேளையில் அவருக்காக நீங்கள் முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது.. அதிகாரம் வழங்குநர் மனநலத்திறனை இழந்த சமயத்தில் மட்டுமே அதிகாரம் பெறுநராகிய நீங்கள் அவருக்காக முடிவு மேற்கொள்ளலாம் மற்றும் செயல்படலாம்.

### D3. நான் ஐந்து சட்டப்பூர்வ நெறிகளை எவ்வாறு பயன்படுத்துவது?

இச்சட்டப்பூர்வ நெறிகள் ஒரு தனி நபருக்கு முடிவெடுக்கும் செய்முறையில் முடிந்தவரை பங்கெடுக்க உதவுவதோடு அவ்வாறு செய்ய அவருக்குத் திறன் குறையும் போது அவருக்குப் பாதுகாப்பும் அளிக்கின்றன.

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு மனிதரின் சார்பாக முடிவுகள் எடுக்கும்போதோ, செயல்படும்போதோ ஒவ்வொரு வழக்கிலும் ஏற்புடைய நடவடிக்கை அல்லது முடிவு எடுக்கப்படுவதை உறுதி செய்ய இந்நெறிகளை மனநலத்திறன் சட்டத்திலுள்ள விதிகளுடன் இணைத்து வாசிக்கவேண்டும்.

#### நெறி 1: திறன் இருப்பதான முன் அனுமானம்

முடிவெடுக்கவேண்டிய சமயத்தில், ஒரு மனிதருக்கு அந்த முடிவை எடுக்கக்கூடிய திறன் இல்லை என்று ஆதாரம் இருந்தாலன்றி அவருக்குச் சுயமாக முடிவெடுக்கும் திறன் உள்ளது என்று அனுமானிக்கப்படவேண்டும்.

ஒரு மனிதரின் தோற்றம், வயது, நிலை அல்லது நடத்தையை அடிப்படையாகக் கொண்டு, அவரின் மனநலத்திறன் குறைப்பாட்டை மதிப்பிடக்கூடாது. ஆகையால், மக்களுக்குச் சுய முடிவுகள் எடுக்க இயலும் சமயங்களில் அவ்வாறு செய்ய அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

#### சாந்தியின் கதை

விவாகரத்தான 66 வயது நிரம்பிய சாந்தி சாந்து, தாழ்வான மின் தூக்கியற்ற அறை-வீடொன்றில், தனியாக வசிக்கிறார். ஆறு மாதங்களுக்கு முன்பு, அவருடைய பிள்ளைகள் சாலை விபத்தொன்றில் துயரமாக மரணம் அடைந்தனர்.

சாந்தி சமூகத்தில் துடிப்புடன் செயல்பட்டு வந்தவர். அவர் பேட்டை நடவடிக்ககளில் துடிப்புடன் பங்கு கொள்வதோடு, வசிப்போர் குழு நடவடிக்கைகளில் தொண்டராய் இருந்து வந்துள்ளார். விபத்து நடந்ததிலிருந்து அவர் யாரிடமும் பேசுவதில்லை.

அந்த அறை-வீட்டுக் கட்டடத்தின் செயற்குழு, சுகாதாரச் சொற்பொழிவு மற்றும் இலவச உடல் நலப் பரிசோதனை ஆகிய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது. நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதில் பங்காற்றும் திறன் சாந்திக்கு இல்லை என்று குழு கருதியதால், சாந்தியை விலக்கிவைக்க சிந்திக்கிறது.

**சாந்தி தனியாக வசிப்பதாலும், யாரிடமும் பேசாமலிருப்பதாலும் அவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று குழு அனுமானிக்கக்கூடாது. ஒரு நபருக்கு திறன் குறைபாடுள்ளது என்று நிரூபிக்கப்பட்டாலன்றி மனநலத்திறன் இருப்பதாக அனுமானிக்கப்படுகிறது. சாந்திக்கு அழைப்பு விடுப்பதை குழு எண்ணிப்பார்க்க வேண்டும். ஈடுபாடு காட்டுவதா இல்லையா என்பது சாந்தியின் விருப்பம்.**

## நெறி 2: நடைமுறைக்கு ஏற்ற எல்லா உதவிகளையும் வழங்குவது

ஒரு குறிப்பிட்ட முடிவைச் செய்ய சிரமப்படக்கூடிய ஒரு மனிதருக்குப் பராமரிப்பு அல்லது சிகிச்சை வழங்கும் பராமரிப்பாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், அதிகாரம் பெறுநர்கள், துணை அதிகாரம் பெறுநர்கள் மற்றும் தொழில் முறை ஊழியர்கள் ஆகியோர் அம்மனிதர் தன் சொந்த முடிவைச் செய்ய உதவும் வகையில் நடைமுறைக்கேற்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அவர்கள் ஆதரிக்கும் மனிதருக்கு ஒரு முடிவைச் செய்ய உதவும் போது அம்மனிதரின் மீது நெருக்குதலைப் பயன்படுத்தவோ அல்லது சொந்த கருத்துகளைப் புகுத்தவோ கூடாது. அவரால்அம்மனிதர் பெறக்கூடிய ஆதரவின் தன்மை, அவர் செய்ய வேண்டிய முடிவின் தன்மையையும், சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கிறது.

ஒரு மனிதர் உரையாடுவதற்குச் சிரமத்தை எதிர்கொள்கிறார் என்ற எளிய காரணத்திற்காக ஒரு தனி நபர் அம்மனிதரின் சார்பாக ஒரு முடிவைச் செய்யக்கூடாது. அதற்கு மாறாக, அத்தனி நபர், பெரிய எழுத்து வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் மூலம் தகவல் கொடுத்தும், சைகை மொழி, பிரெயில் (Braille) போன்ற வெவ்வேறு தொடர்புகொள்ளும் முறைகளைப் பயன்படுத்தியும் ஆதரவு வழங்க வேண்டும்.

### டிம் அவர்களின் கதை

பல போலீஸ் அதிகாரிகள், டிம் என்கிற ஒரு நடுத்தர வயதுள்ள ஆடவர், தீவு விரைவுச்சாலை மேம்பாலத்தின் அடியில் குடியிருப்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். அவர் மிகவும் அழுக்காக இருக்கிறார். அவரது காலில் தொற்றி பரவியது போன்றும் ஒரு பெரிய வெட்டு உள்ளது. அவர்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

மருத்துவமனை ஊழியர்கள், டிம்மிடம் அவரது சொந்த விவரங்களையும், தொடர்பு கொள்ளக்கூடிய உறவினர்களைப் பற்றியும் விசாரிக்கின்றனர். அவர் உரையாடுவதற்கு உதவியாக, இந்தக் கேள்விகள் பல மொழிகளில் கேட்கப்படுகின்றன. அவர் மௌனமாக இருக்கிறார். அவருடைய காயத்தைப் பரிசோதிக்க விரும்பும் மருத்துவருடன் ஒத்துழைக்க மறுக்கிறார்.

டிம்மின் காயத்திற்குச் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால், அவர் தன் காலை இழக்க நேரிடும் என்று மருத்துவர் கூறினார். நிலைமையை அவருக்கு விளக்குவதற்கு அந்த ஆடவரின் கால் மீது இரம்பம் கொண்டு அறுப்பதைப் போன்ற சைகையைச் செய்கிறார். அதன் பிறகு அவர் கூடுதல் கவனம் செலுத்துவதைப் போன்று தோன்றுகிறது. அவர் தலையை ஆட்டிக்கொண்டே தன் வாயையும், காதுகளையும் சுட்டிக்காட்டுகிறார்.

டிம் காது கேளாத ஊமையாக இருக்கலாம் என்று ஒரு தாதி உணர்கிறார். ஆதலால், ஒரு தாளையும், பேனாவையும் அவருக்குக் கொடுத்து, சைகை மொழிபெயர்ப்பு தெரிந்த ஒருவரையும் வரவழைக்கிறார். அவர் சமாதானம் அடைந்து, மருத்துவமனை ஊழியருடன் எழுத்து வழி தொடர்புகொள்ளத் தொடங்குகிறார்.

**டிம்மால் வாய்மொழியாக உரையாட இயலாமல் இருந்திருக்கலாம். ஆனால், அதுவே அவருடைய சிகிச்சையைப் பற்றிய முடிவை அவரால் செய்ய முடியாது என்று அர்த்தமாகாது. அவர் ஒரு முடிவைச் செய்யவும், அந்த முடிவை எடுத்துச்சொல்லவும் தேவைப்படுகிற எல்லா நடைமுறைக்கேற்ற உதவிகளையும் கொடுப்பதற்கு முன், அவருக்குச் சிகிச்சையைப் பற்றி முடிவெடுக்கும் மனநலத்திறன் இல்லை என்று மருத்துவக் குழு முடிவெடுக்கக் கூடாது.**

**அவசர சூழ்நிலைகளில், உதாரணத்திற்கு, விபத்தின் காரணமாக கடுமையான காயங்களுடன் இருக்கும் சமயங்களில், ஒருவர் அவரது சொந்த முடிவுகளைச் செயவதை ஆதரிக்கப் பெரும் அளவிலான நடைமுறைக்கேற்ற வழிகளை மேற்கொள்வது சாத்தியாமாகாது. அச்சமயங்களில் என்ன நடக்கிறது, ஏன் நடைமுறைகள் செயல்படுத்தப்படுகின்றன என்று அவருக்கு அறிவிப்பதை மட்டுமே செய்ய முடியும்.**

## நெறி 3: விவேகமற்ற முடிவு

ஒரு மனிதர் செய்யும் முடிவுகள் மற்றவர்களின் கண்ணோட்டத்தில் விவேகமற்ற முடிவுகளாகத் தோன்றினாலும் அவரது சொந்த முடிவுகளைச் செய்வதற்கு அவருக்குச் சுதந்திரம் உண்டு. ஒரு மனிதர் தன் சொந்த முடிவுகளச் செய்வதற்கு செய்யும் உரிமையை இது அங்கீகரிக்கிறது. ஒரு முடிவு விவேகமற்றதாக இருப்பதால், அம்மனிதர் மனநலத்திறனை இழந்துவிட்டார் என்று அர்த்தமாகாது.

ஆயினும், ஒரு மனிதர் விவேகமற்ற முடிவைச் செய்வதற்கும், (தீர்மானிக்கும் மனிதர் செய்யக்கூடிய முடிவு), ஒரு மனிதர் முடிவைச் செய்யத் தேவைப்படும் தகவலை அம்மனிதர் புரிந்துகொள்ள, நினைவு கூற அல்லது பயன்படுத்த மனநலத்திறன் இழந்த நிலையில் செய்யப்படும் முடிவிற்கும் வேறுபாடுண்டு.

ஒரு மனிதரின் வழக்கமான நடத்தையைக் கருத்தில் கொண்டு, அவர் எடுக்கும் பல முடிவுகள் வழக்கத்திற்கு மாறாக இருந்தாலோ அல்லது மற்றவர்கள் அவரை எளிதில் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அல்லது அவருக்குத் தீங்கு விளைவிக்ககூடிய முடிவுகளைச் செய்தாலோ, அம்மனிதரின் மனநலத்திறனைப் பற்றிய கூடுதல் சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.

### ஆ ஹுவாட் அவர்களின் கதை

ஆ ஹுவாட்டிற்கு 73 வயது. அவர் மனைவியை இழந்து தனியாக வசித்து வருகிறார். கடந்த வாரம், போல் என்ற ஜன்னல் பொருத்தும் வியாபாரி ஒருவர் ஹுவாட்டை அவரது வீட்டில் சந்தித்தார். கழிவறை ஜன்னல்கள் துருப்பிடித்திருப்பதால், அவற்றை மாற்ற வேண்டும் என்று போல் ஆ ஹுவாட்டை நம்பவைக்கிறார். மறு தினம் போல், மீண்டும் ஆ ஹுவாட்டின் வீட்டிற்குச் சென்று ஆ ஹுவாட் தன் படுக்கை அறையின் ஜன்னல்களையும் மாற்ற வேண்டும் என்று அவருக்கு ஆலோசனை கூறுகிறார். போல் ஆ ஹுவாட்டிடம் $500 விலை குறிப்பிடுகிறார்.

ஆ ஹுவாட்டின் மகன் ஆ செங், தன் தந்தையின் மீது கவலை கொள்கிறார். வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பதால் ஆ ஹுவாட் தன் நிதி விவகாரங்களில் கவனமாக இருப்பது வழக்கம்.

போல் மூன்றாவது முறையாக திரும்பி வருகிறார். அப்பொழுது, ஆ ஹுவாட்டும் தன் வீட்டில் இருக்கும் மற்ற ஜன்னல்கள் அனைத்தையும் $1500க்கு மாற்ற ஒத்துக்கொள்கிறார். ஜன்னல்களை முன்கூட்டியே பரிசோதித்த ஆ செங், ஜன்னல்கள் நல்ல நிலையில் இருந்ததையும், அவற்றை மாற்ற வேண்டிய அவசியம் இல்லாததையும் கவனித்தார். தன் தந்தையை போல் பயன்படுத்திக்கொள்கிறார் என்று ஆ செங் நம்புகிறார். மேலும் இதே போன்ற பொருள் வாங்கும் தீர்மானங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் ஆ ஹுவாட்டிற்கு உள்ளதா என்றும் அவர் சிந்தித்துப் பார்க்கிறார்.

நல்ல ஒரு விலை கிடைப்பதால், எல்லா ஜன்னல்களையும் ஒரே சமயத்தில் மாற்றத் தான் விரும்புவதாக, ஆ ஹுவாட் விளக்குகிறார். ஓரிரு வருடங்களில் எல்லா ஜன்னல்களையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும் என்று அவர் நம்புகிறார்.

**தன் தந்தை ஆ ஹுவாட்டிற்கு 73 வயதாவதாலும், அவர் வீட்டின் எல்லா ஜன்னல்களையும் மாற்ற முடிவெடுத்திருப்பதாலும் அவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று ஆ செங் அனுமானிக்கக்கூடாது. ஆ ஹுவாட்டின் வழக்கமான நடத்தையில் தொடர்ந்து மாற்ற்றம் ஏற்பட்டு, அது கவலைக்கு உரியதாக இருந்தால், அது தொடர்பாக ஆ செங் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும்.**



## நெறி 4: மிகச்சிறந்த நலன்கள்

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு மனிதரின் சார்பாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயல் அல்லது முடிவு, அவரது மிகச்சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டு செய்யப்பட வேண்டும். செய்யப்படும் முடிவு, அம்மனிதரின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டுள்ளதா என்பது வழக்கின் சூழ்நிலைகளைச் சர்ந்திருக்கும்.

### ரோன் அவர்களின் கதை

கெவின் கூவிற்கும், அவரது மனைவி .ஸாலி லீவிற்கும் மூன்று பிள்ளைகள் அவர்களது மூத்த பிள்ளை, 23 வயதான ரோன் அறிவாற்றல் ஊனமுற்றவர். அவர் அறநிலையம் ஒன்றால் நடத்தப்படும் புகலிடப்பட்டறை ஒன்றில் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

ரோன் போன்றோர் யாரையும் சுதந்திரமாக வாழ்வதற்கு அடிப்படை வாழ்க்கைத் திறன்களைக் கற்றுப் பெறுவதற்குத் தற்காலிகத் தங்குமிட வசதி அளிக்கும் திட்டமும் அறநிலையத்திடம் உள்ளது. ஓரளவு ஆதரவுடன் பொதுப் போக்குவரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றியும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த வாழ்க்கைத் திறன்கள் பொது வேலை வாய்ப்புகளுக்கு அவர்களை மேலும் தகுதியுடையவர்களாக்க உதவுகிறது.

தங்குமிட வசதி திட்டத்தில் ஓர் இடம் கிடைத்திருப்பதால் அறநிலையத்தின் சமூக ஊழியர்கள் ரோன் அந்த வாய்ப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கின்றனர்.

ரோன் மேலும் சுதந்திரமாக இருக்க விரும்புவார் என்று கெவின் மற்றும் ஸாலி இருவருக்கும் தெரியும். ஆயினும், ரோன் அந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்டால், இனி அவர்களால் ரோனைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள முடியாமல் போவதோடு ரோன் அவர்களுடன் குறைந்த நேரமே செலவிடுவார் என்று அவர்கள் கவலைப்படுகின்றனர்.

**தங்குமிட வசதி திட்டத்தைப்பற்றி ரோனிற்கு முடிவு செய்யும் மனநலத்திறன் இருந்தால் கெவின், ஸாலி இருவரும் அவருக்காக முடிவைச் செய்யக்கூடாது இந்த முடிவைச் செய்வதற்கு ரோனிற்குத் திறன் குறைபாடிருந்தால், கெவின், ஸாலி இருவரும் ரோனின் மிகச் சிறந்த நலனை முன்னிட்டுச் செயல்பட வேண்டுமே தவிர தங்களின் நலனுக்காக அல்ல.**

### நெறி 5: குறைவான கட்டுப்பாடுகள்

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களுக்காக செயல்படும்போது அல்லது அந்தச் செயலோ அல்லது முடிவோ குறைபாடுள்ளவரின் செயல்படும் உரிமை மற்றும் சுதந்தரத்திற்குக் குறைவான கட்டுப்பாடுகளை விதிப்பவையாக இருக்க வேண்டும்.

குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட விருப்பத்தேர்வே பெரும்பாலும் அம்மனிதரின் மிகச்சிறந்த நலனுக்குள்ளதாக இருக்கும்.

சில சமயங்களில், எந்த ஒரு செயலையோ, முடிவையோ செய்யாமலே இருப்பதும் அதில் அடங்கும். செய்யப்படும் எல்லாச் செயல்களும் அல்லது முடிவுகளும் அல்லது எந்தச் செயலும் செய்யக்கூடாது என்று எடுக்கப்படும் முடிவும் அம்மனிதரின் மிகச் சிறந்த நலனுக்காக எடுக்கப்பட வேண்டும்.

#### ஆ மெய் அவர்களின் கதை

ஆ மெய் என்பவர் டிமென்சியா எனும் நினைவாற்றல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். தன் 80-வயது தாயார் திருவாட்டி குவாங் சியு மோய்யுடன் வாழ்ந்து வருகிறார்.

ஆ மெய் வேலைக்குச் செல்லும் சமயங்களில் தன் தாயார் தன்னையே காயப்படுத்திக்கொள்ளாமல் இருக்கவும், அலைந்து திரியாமல் இருக்கவும், அவரை ஓர் அறையில் பூட்டி வைப்பார். அறையில் உணவும், தண்ணீரும் வைத்துவிடுவார். திருவாட்டி குவாங் அணையாடை (டைபர்ஸ்) அணிந்திருப்பார்.

மாலையில் ஆ மெய் வீடு திரும்பியதும், தன் தாயைக் குளிப்பட்டி உணவு ஊட்டுவார். ஆ மெய் தாயாரின் பாதுகாப்பின் மீது அக்கறை கொண்டு செயல்பட்டாலும், ஒரு பாசமிகு மகளாக இருந்தாலும் இவ்வகையான பராமரிப்பு, குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட தேர்வு அல்ல.

நினைவாற்றல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருப்போருக்கான பகல் நேரப் பராமரிப்பு நிலையத்தில் திருவாட்டி குவாங்கைச் சேர்ப்பது போன்ற பொருத்தமான மற்றப் பராமரிப்பு ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டும்.

**ஒன்றுக்கும் மேற்பட்ட விருப்பத்தேர்வுகள் உண்டெனில் அவை ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டும். எடுக்கப்படும் முடிவு மிகச் சிறந்த நலன் மற்றும் குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட தேர்வு ஆகிய இரு நெறிகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்.**






# பகுதி E

## கருத்து வேறுபாடு நேர்ந்தால் என்ன நிகழும்?

### E1. கருத்து வேறுபாடு நேர்ந்தால் நான் என்ன செய்யவேண்டும்?

கருத்து வேறுபாடு ஏற்பட்டால், நீங்கள் பின் வரும் உத்திகளைக் கையாள வேண்டும்:

#### பயனுள்ள தகவல் பரிமாற்றம்

தகவல் பரிமாற்றம் சிதைந்து போகும்போதும் அல்லது புரிந்துணர்வு இல்லாத போதும், சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். இதுபோன்ற சமயங்களில் தனி நபர்கள் பலரும் ஒன்று கூடுவதற்காக, மிகச் சிறந்த நலன்கள் தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்வது பயனளிக்கக்கூடும். அனைத்துத் தரப்பினரும், அவரவர்களுடைய வெவ்வேறு கருத்துக்களையும், மனநலத்திறன் குறைபாடு உள்ளவரின் மிகச் சிறந்த நலன்களைக் குறித்த காரியங்களைப் பற்றியும் கலந்து பேசவும், இது உதவுகிறது. அனைத்துத் தரப்பினர்களும் ஒவ்வொருடைய கருத்துக்களைக் கேட்ட உணர முயற்சி செய்ய வேண்டும்.

#### சமரசம்

இது, வளரும் அல்லது ஆரம்பக் கட்டத்திலுள்ள தகராறுகளைத் தீர்க்கும் ஒரு சிறந்த வழிமுறையாகும். இது சிக்கனமாகவும், துரிதமாகவும் இருக்கும் மற்றும் நீதிமன்றத்திற்கு செல்வதை விட குறைந்த மனஉளைச்சலையும் உண்டாக்கும். சார்பற்ற ஒரு மூன்றாவது தரப்பினர் (சமரசம் காண்பவர்), சமரசம் காண்பதற்கு தகராறு உகந்ததா என்பதை தீர்மானிப்பார். கலந்துரையாடல் வழி, மற்றவர்களுடைய கருத்து வாதங்களை அனைவருக்கும் புரிய வைக்க இவர் முனைவார். அவரவர்களுடைய கருத்து வாதங்களை ஒரு வலியுறுத்தல் வழியில் இல்லாமல், மனநலத்திறன் குறைபாடுள்ளவருடைய மிகச்சிறந்த நலன்களை மையமாகக் கருதியே தீர்வு காணப்படும்.

சமரசம் காணுதல் குறித்து மேலும் அறிய, தொடர்பு கொள்ளுங்கள்:

சிங்கப்பூர் மத்தியஸ்த மையம்
1 Supreme Court Lane
Level 4
Singapore 178879
இணையதளம்: www.mediation.com.sg
தொலைபேசி: 6332 4366

சமுதாய வைத்திய மையம்
100 High Street
#03-02, The Treasury
Singapore 179434
இணையதளம்: www.cmc.gov.sg
தொலைபேசி: 6325 1600

### ஹலிமாவின் கதை

72 வயதான ஹலிமா ஹகிமுக்கு, நினைவுத் திறன் இழப்பு நோய் முற்றிவிட்ட நிலையில் உள்ளது. ஒரு தனியார் இணைப்பு வீட்டில், தன் மகன் அன்வர் மற்றும் அவருடைய மனைவி நோரா மற்றும் இவர்களுடைய இரண்டு இளம் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். ஹலிமாவுக்கு, அஸ்லான் மற்றும் அடாம் என்கிற, வயது முதிர்ந்த மற்ற இரு பிள்ளைகளும் உண்டு. அன்வர், நோரா ஆகிய இருவரும், முழு நேர வேலை செய்கின்றனர். அவர்களின் வேலை நேரத்தின் போது, ஹலிமாவை கவனித்துக்கொள்ள, ஒரு உதவியாளரை வேலைக்கு வைத்திருக்கின்றனர்.

இன்னும் 6 மாத காலத்தில், அன்வருக்கும் நோராவுக்கும் மூன்றாவது பிள்ளை பிறக்கும். வீட்டில் இடம் வசதி இல்லாத காரணத்தால், குழந்தை பிறக்கும் போது, ஹலிமாவை ஒரு நலம் பேணகத்துக்கு அனுப்புவதற்கு அவர்களுக்குத் திட்டம் உண்டு. அஸ்லானும், அடாமும் இந்தத் திட்டத்திற்கு தம் சகோதரனுடன் இணங்கவில்லை. இருந்தாலும், ஹலிமாவைத் தங்கள் வீட்டில் வைத்துக்கொள்ள தயாராகவும் இல்லை. அதற்குப் பதிலாக, இப்போதிருக்கும் ஏற்பாடு தொடர்ந்து இருப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஹலிமா அவருடைய தனியாள் நலனுக்காக ஒரு செல்லத்தக்க நீண்டகால அதிகாரப் பத்திரம் செய்திருக்கிறார். அவர்கள் நலமாக இருந்தபோது மகன்கள் மூவரையும் அதிகாரம் பெறுநராக தேர்வு செய்திருக்கிறார்.

**அன்வர், அஸ்லான், அடாம் மூவரும் அவர்களுடைய வேறுபட்டக் கருத்துக்களைக் குறித்துக் கலந்து பேசவேண்டும். ஹலிமா எங்கே வாழ வேண்டும் என்பதைப்பற்றி மாற்றுத் தீர்மானம் செய்ய வேண்டும். ஒரு முடிவுக்கு வர முடியாமல் போனால், சமரசம் காண முயற்சிக்க வேண்டும். எந்த முடிவு எடுத்தாலும், அது தங்களுடைய அம்மாவின் நலனுக்காக இருக்க வேண்டும்.**



### தொழில் முறையாகப் பணிபுரிபவருடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகள்

உடல் நலன் பேணுபவர்கள், சமூக சேவையாளர்கள், மற்றும் வேறு தொழில் வல்லுநர்களோடு கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, கீழ்க்காணும் வழிகளில் தீர்வு காணலாம்:

a. மாற்றுக் கருத்து நாடுவது (மருத்துவ மற்றும் சட்ட சம்பந்தப்பட்ட விவகாரங்களில்)

- சில வேளைகளில், மனநலத்திறன் குறையுள்ளவரின் குடும்ப உறுப்பினர், மனநலத்திறன் குறையுள்ளவரின் மருத்துவர் கொடுத்த ஆலோசனைப்படி முடிவு மேற்கொண்ட அதிகாரம் பெறுநர் எடுத்த முடிவை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் இது குறித்து, கருத்து வேறுபாடு உள்ளவர்கள், வேறொரு மருத்துவரின் மாற்று ஆலோசனை மூலம், ஏற்பட்ட சச்சரவுக்குத் தீர்வு காணலாம்.
- இது சட்ட விவகாரங்களுக்கும் பொருந்தும். எ.கா. சொத்து மற்றும் விவகாரங்கள் தொடர்பாக அதிகாரம் அளிக்கப்பட்டவர், வழக்குரைஞர் ஆலோசனைப்படி முடிவு மேற்கொள்ள எண்ணம் கொள்கிறார். ஆனால் வழக்குரைஞர் ஆலோசனையை மற்ற அதிகாரம் பெறுநர் ஏற்கவில்லை. இச்சூழ்நிலையில், வேறு வழக்குரைஞரை நாடி மாற்று ஆலோசனை கருத்துக் கேட்கலாம்.

b. வழக்குத் தொடர்பான கலந்துரையாடல்கள்

- சர்ச்சைக்குரிய காரியங்களைப்பற்றி முடிவெடுக்கக் கூடிய தேர்வுகள் தொடர்பாக அனைத்து தரப்பினரும் ஒன்றுகூடி, கலந்து பேசுவதற்கு இது வசதி புரிகிறது. உடல் நலம் பேணுபவரும் மற்ற தொழில் முறை பணியாளர்களும், கிடைக்கக்கூடிய தேர்வுகளைப்பற்றித் தெளிவாக விளக்கம் கொடுக்க வேண்டும். இந்தச் சர்ச்சைத் தொடர்பாக அவர்கள் ஆதரிக்கும் கருத்துக்களையும் காரணங்களையும் முன்வைத்து எடுத்துக் கூறலாம்.
- மருத்துவத்துறையில் பணிபுரியும் மூத்த உறுப்பினர் உடனான சந்திப்புக்கூட்டம்.
  மூத்த மருத்துவப் பணியாளரை மாற்றுக் கருத்துக் கூற அழைக்கலாம்.
- குடும்ப உறுப்பினருக்கு நன்கு யோசிப்பதற்கு நேர அவகாசம் வழங்கலாம். அவசர நிலைகளில் இதத்தேர்வு கிடைக்காது.
- அதிகாரபூர்வமான புகார் செய்வது.
  சுகாதார நலன் பேணுபவர் மற்றிய புகாருக்கு, தொடர்பு கொள்ள வேண்டியது:
  - சுகாதார நலன் பேணுபவரின் முதலாளி, மற்றும்
  - தொழில்துறை வாரியம், மன்றம், தொழில்துறையை பிரதிநிதிக்கும் கழகம்.

## E2. மேல் விவரங்களை நான் எங்கு தேடலாம்?

விவாதத்திற்கு தீர்வு காண உங்களுக்கு உதவக்கூடிய அமைப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன.

| அமைப்பு | தொலைபேசி | விலாசம் | இணையதளம் |
|---|---|---|---|
| பெற்றோர் பராமரிப்பு ஆணையர் அலுவலகம் | 1800 222 0000 | 8 Lengkok Bahru<br>#02-01, Family Link @ Lengkok Bahru<br>Singapore 159052 | www.maintenanceofparents.gov.sg |
| சமுதாய வைத்திய மையம் | 6325 1600 | 100 High Street<br>#03-02, The Treasury<br>Singapore 179434 | www.cmc.gov.sg |
| சிங்கப்பூர் சமூக ஊழியர்கள் சங்கம் | 6778 7922 | Blk 324 Clementi Avenue 5<br>#01-209<br>Singapore 120324 | www.sasw.org.sg |
| சிங்கப்பூர் பல் மருத்துவர்கள் கழகம் | 6355 2405 | 16 College Road<br>#01-01, College of Medicine Building<br>Singapore 169854 | www.sdc.gov.sg |
| சிங்கப்பூர் பல் மருத்துவர்கள் சங்கம் | 6220 2588 | 2 College Road<br>Level 2, Alumni Association<br>Singapore 169850 | www.sda.org.sg |
| சிங்கப்பூர் மருத்துவக் கழகம் | 6223 1264 | 2 College Road<br>Level 2, Alumni Medical Centre<br>Singapore 169850 | www.sma.org.sg |
| சிங்கப்பூர் மத்தியஸ்த மையம் | 6332 4366 | 1 Supreme Court Lane<br>Level 4<br>Singapore 178879 | www.mediation.com.sg |



| அமைப்பு | தொலைபேசி | விலாசம் | இணையதளம் |
|---|---|---|---|
| சிங்கப்பூர் மருத்துவ மண்டலி | 6372 3093 | 16 College Road<br>#01-01, College of Medicine Building<br>Singapore 169854 | www.smc.gov.sg |
| சிங்கப்பூர் தாதியர் குழு | 6478 5400 | 16 College Road<br>#01-01, College of Medicine Building<br>Singapore 169854 | www.snb.gov.sg |
| சட்ட உதவிக் குழு | 1800 325 1424 | 45 Maxwell Road<br>#08-12,<br>URA Centre East Wing<br>Singapore 069118 | www.lab.gov.sg |
| சிங்கப்பூர் சட்ட சமூகம் | 6538 2500 | 39 South Bridge Road<br>Singapore 058673 | www.lawsociety.org.sg |

# விளக்கச்சொற்கள்

## மிகச் சிறந்த நலன்கள்

மனநலத்திறனை இழந்தவரின் சார்பாக ஒரு முடிவை எடுக்கும் முன்பு அவருக்கு எது சிறந்தது என்பதில் கவனம் செலுத்தும் பல காரணிகளைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய கடமை முடிவெடுப்போருக்கு உள்ளது. மேலும் தகவல் பெற சட்ட நடைமுறை விதித் தொகுப்பின் 6-ஆம் அத்தியாயத்தைக் காண்க.

## நடைமுறை வழக்குத் தொகுப்பு

இந்தத் தொகுப்பு மனநலத்திறன் சட்டத்திற்கு (சட்டம்) ஆதரவு அளிக்கிறது மற்றும் சட்டத்தை நடைமுறையில் எப்படி அமல் செய்வது என்பதைப் பற்றி மேலும் விளக்கத்தை அளிக்கிறது.

## முடிவெடுப்பவர்

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களின் சார்பாக முடிவுகளைச் செய்யும் ஒரு தனி நபர் அல்லது ஓர் ஆள் ஆகியோர் முடிவெடுப்பவர்களாவர். இவற்றில் பராமரிப்பாளர்கள், தாதிகள், மருத்துவர்கள், நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (Lasting Power of Attorney, LPA) அதிகாரம் பெறுநர்கள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட துணை அதிகாரம் பெறுநர்கள் ஆகியோர் அடங்குவர்.

## அதிகாரம் வழங்குநர்

குறைந்தது 21 வயதுடைய நபர், தான் ஏதாவது ஒரு நாள் தனக்கு மனநலத்திறன் குன்றினால் தனது தனியாள் நலன் மற்றும் / அல்லது ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வை நியமிக்கும் நபர்.

## அதிகாரம் பெறுநர்

தங்களுக்கு சொந்த விவகாரங்களை நியமிக்க இயலாதவாறு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் போது தங்களின் சார்பாக தங்களின் சுய நல்வாழ்வைப்பற்றி மற்றும்/அல்லது சொத்து மற்றும் அலுவல் விவகாரங்களைக் குறித்து முடிவுகளை எடுக்கவும் அதிகாரம் வழங்கும் தனி நபர்களால் நியமிக்கப்படுபவர்களே அதிகாரம் பெறுநர்கள்.

## கூட்டாக

அதிகாரம் பெறுநர்களும், துணை அதிகாரம் பெறுநர்களும் கூட்டாகச் செயல்பட வேண்டும். தனியாகச் செயல்படக் கூடாது.



## கூட்டாகவும் தனித்தனியாகவும்

அதிகாரம் பெறுநர்களும், துணை அதிகாரம் பெறுநர்களும் கூட்டாகவும் தனித் தனியாகவும் செயல்பலாம். இந்த முறையில் செயல்பட்டாலும் ஏற்கத்தக்கதாகும்.

## நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA)

ஒரு அதிகாரம் வழங்குநர் அவருக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும்போது, குறிப்பிட்ட முடிவுகளை அவரது சார்பாகச் செய்ய ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களையோ அவர் தன் சுயவிருப்பத்துடன் நியமிக்க அனுமதி வழங்கும் ஒரு சட்டம் சார்ந்த பத்திரம் இது.

## உயிர் வாழ் சிகிச்சை

நலப் பராமரிப்பு வழங்கும் ஒரு நபரின் கருத்தில் ஒருவரது உயிரை நிலைக்கச் செய்ய மேற்கொள்ளப்படும் சிகிச்சையே உயிர் வாழ் சிகிச்சை.

## மத்தியஸ்தம்

மத்தியஸ்தம் என்பது விவாதங்களுக்கு தீர்வு காணும் ஒரு வழிமுறை. மத்தியஸ்தர் என அழைக்கப்படும் ஒரு சுதந்தரமான மூன்றாம் கட்சி, கலந்தாலோசித்தல் மூலமாக இரு பக்கத்தினரும் ஒருவர் மற்றவருடைய அபிப்பிராயத்தை புரிந்துகொள்ள உதவுவார்.

## மனநலத்திறன்

திட்டவட்டமான ஒரு முடிவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எடுக்க ஒரு நபருக்குள்ள ஆற்றலே மனநலத்திறன் என்பதாகும்.

## பொதுக் காப்பாளர் அலுவலகம்

மனநலத்திறன் சட்டத்தின் கட்டமைப்பின் ஊடே பொதுக் காப்பாளரின் அலுவககத்திற்குப் பரந்தகன்ற பொறுப்புகள் உள்ளன. இவற்றில் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) பதிவேட்டை நிர்வகிப்பது, துணை அதிகாரம் பெறுநர்களை மேற்பார்வையிடுவது மற்றும் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளைப் புலன் விசாரணை செய்வது ஆகியவை அடங்கும்.

## தனியாள் நலன் அதிகாரம் பெறுநர்

அதிகாரம் வழங்கும் ஒருவர் (அதிகாரம் வழங்குநர்) தனக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் சூழலில், தனியாள் நலன் விவகாரங்களில் அவரே முடிவுகள் செய்ய இயலாதபோது அவரது சார்பாக அம்முடிவுகளைச் செய்ய ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வின் கீழ் அவர் நியமிக்கும் ஒரு தனி நபரே ஒரு தனியாள் நலன் அதிகாரம் பெறுநர். அதிகாரம் வழங்குநர் எங்கு வசிக்க வேண்டும், அதிகாரம் வழங்குநரோடு யார் தொடர்பு வைத்துக்கொள்ளலாம் அல்லது தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது போன்ற வாழ்க்கைமுறை தொடர்பான முடிவுகள் தனியாள் நலன் முடிவுகளாகும்.

## சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்

அதிகாரம் வழங்கும் ஒருவர் தனக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் சூழலில், சொத்து மற்றும் அலுவல் விவகாரங்களைக் குறித்து அவரே முடிவுகள் செய்ய இயலாதபோது அவரது சார்பாக அம்முடிவுகளைச் செய்ய ஒரு நீண்ட கால அதிகாரப்பத்திரத்தின் (LPA) கீழ் அவர் நியமிக்கும் ஒரு தனி நபர் அல்லது பொறுப்பாண்மை நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் 336 கீழ் உரிமம் பெற்ற பொறுப்பாண்மை நிறுவனம் ஆகியோர் சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்களாவர்.

## அடக்குமுறைச் செயல்கள்

தன் மீது பயன்படுத்தப்படும் பலாத்காரத்தை எதிர்க்கும் ஒருவரின் மீது ஒரு நபர் பலாத்காரத்தை பயன்படுத்துவதும், பலாத்காரம் பயன்படுத்தப்படும் என்ற மிரட்டல் விடுப்பதும் அல்லது அவ்வொருவர் எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும் அவர் சுதந்திரமாக நடமாடுவதைக் கட்டுப்படுத்துவதும் அடக்குமுறைச் செயல்கள் ஆகும். உடல்சார்ந்த பலாத்காரமோ, உடல்சார்ந்த பலாத்காரம் பயன்படுத்தப்படும் என்ற மிரட்டலோ இல்லாமலும் ஒருவரை அடக்க முடியும்.

## சட்டபூர்வ நெறிகள்

மனநலத்திறன் குறைபாடுள்ள அல்லது மனநலத்திறன் குறைபாடு ஏற்படக்கூடியவர்களுடன் தொடர்புகொள்ளும் போது மனநலத்திறன் சட்டத்தின் கீழ் ஐந்து சட்டபூர்வ நெறிகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

## விவேகமற்ற முடிவு

இது சட்டபூர்வ நெறிகளில் ஒன்றைக் குறிக்கிறது. மனநலத்திறன் உள்ள ஒரு நவருக்கு மற்றவர் நோக்கில் விவேகமற்றது என்று புலப்படும் ஒரு முடிவை எடுக்கும் உரிமை உள்ளது. எடுக்கப்படும் முடிவு அறிவுப்பூர்வமற்றதாக இருப்பதால் அந்நபர் மனநலத்திறனை இழந்துவிட்டார் என்று பொருள்படாது.

**OFFICE OF THE PUBLIC GUARDIAN**
Ministry of Social and Family Development
20 Lengkok Bahru
#04-02, Family @ Enabling Village
Singapore 159053

**Hotline:** 1800 226 6222
**Email:** enquiry@publicguardian.gov.sg
**Website:** www.publicguardian.gov.sg

Fourth Edition
Printed in Dec 2016

OFFICE OF THE PUBLIC GUARDIAN

MSF | MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT